செ.கு.எண்: 40 நாள்: 03.08.2021

**மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:**

கேள்வி: சட்டமன்ற பேரவை நூற்றாண்டு விழா மற்றும் கலைஞர் படத்திறப்பு விழாவில் எதிர்கட்சியான அ.இ.அ.தி.மு.க பங்கேற்கவில்லை. முறையான அழைப்பு அனுப்பப்பட்டதா?

பதில்: விழாவில் கலந்து கொள்வதும் அல்லது கலந்து கொள்ளாததும் அவர்களுடைய விருப்பம். ஆனால் எதிர்க்கட்சித் தலைவரை மேடையில் அமர வைக்க வேண்டும் அவர்களுடைய ஒத்துழைப்போடு விழாவை சிறப்பாக நடத்த வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நினைத்தார். விழா நடத்த திட்டமிட்ட பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னை அழைத்து எதிர்க்கட்சித் தலைவரை தொடர்புக் கொண்டு விழாவிற்கு வருகை தர வேண்டும் எனவும், மாண்புமிகு குடியரசு தலைவர், மாண்புமிகு ஆளுநர், மாண்புமிகு முதலமைச்சர் ஆகியோர் அமரும் வரிசையிலேயே தங்களுக்கும் இடம் ஒதுக்கப்படும் எனவும், தாங்கள் விழாவில் வாழ்த்துரைக்க வேண்டும் எனவும், எதிர்க்கட்சித் தலைவரிடம் கூறுமாறு எனக்கு அறிவுரை வழங்கினார். நானும் அவ்வாறே அவரிடம் விவரங்களைக் கூறி அழைப்பு விடுத்தேன்.

அதற்கு அவர் அனைவரிடம் கலந்து ஆலோசித்து கூறுவதாக கூறினார். ஆனால் அவர்கள் கலந்து கொள்ளவில்லை என்பதை என்னிடம் கூறாமல் சட்டப்பேரவை செயலாளரிடம் நாங்கள் இவ்விழாவில் கலந்துக்கொள்ளவில்லை என கூறியுள்ளார். ஆனால் அவர்கள் கூறும் காரணம் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அம்மையார் அவர்களின் படத்திறப்பு விழாவில் தி.மு.க பங்கேற்கவில்லை என்று கூறுகின்றனர். ஆனால் அவர்கள் மற்றவர்களுக்கு அழைப்பிதழ் அனுப்புவது போலவே எங்களுக்கும் அழைப்பு அனுப்பினார். ஆனால் நாங்கள் அப்படி அல்ல. முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அம்மையார் அவர்களின் படத்திறப்பு விழாவில் அப்பொழுது எதிர்க்கட்சியாக இருந்த எங்களுக்கு உரிய மரியாதை இல்லை என்பதால் நாங்கள் கலந்துகொள்ளவில்லை. ஆனால், நாங்கள் உரிய மரியாதையை அவர்களுக்கு அளிப்போம்.

கேள்வி: பாரதிய ஜனதா கட்சி மாநில தலைவர் திரு. அண்ணாமலை அவர்கள் இவ்விழாவில் கலந்துக்கொண்டதைப் பற்றி தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: பாரத ஜானதா கட்சி மாநில தலைவர் திரு.அண்ணாமலை அவர்கள் படத்திறப்பு விழாவில் கலந்துக் கொண்டதை முழு மனதோடு வரவேற்கிறேன். அவரின் நல்ல உள்ளத்தை பாராட்டுகிறேன்.

கேள்வி: கர்நாடக முதலமைச்சர் மேகதாதுவில் அணைக் கட்டியே தீருவேன் எனக் கூறுகிறாரே?

பதில்: உச்ச நீதிமன்றம், காவேரி நடுவர் மன்றம் ஆகியவற்றின் தீர்ப்பை மதிக்க வேண்டும். தீர்ப்பையும் நீதிமன்றக் கருத்தையும் ஏற்க மாட்டோம் என கர்நாடக

முதல்வர் கூறுவது ஏற்புடையது அல்ல. அவரின் தந்தை திரு. பொம்மை அவர்கள் எங்கள் தலைவர் கலைஞரோடும் தமிழகத்தின் மீதும் பற்றும், நட்புறவும் கொண்டவர். அவருடைய வழியில் நட்புறணர்வோடு கர்நாடக முதல்வர் செயல்படுவார் என நம்புகிறேன்.

கேள்வி: மார்க்கண்டேய நதியில் அணை கட்டியுள்ளார்களே, நடுவர் மன்றம் அமைத்திட முயற்சி மேற்கொள்ளப்படுகிறதா?

பதில்: அணைக் கட்டும் பொழுதே மத்திய அரசுக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. தொடர்ந்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு நிலுவையில் உள்ளது. அணைக் கட்டுவதற்கு தடை விதிக்காமல் நடுவர் மன்றத்தை மத்திய அரசு அமைக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதுவரை மத்திய அரசு இதுகுறித்து நடவடிக்கை எடுக்கவில்லை. சில நாட்களுக்கு முன்பு மத்திய நீர்வளத்துறை அமைச்சர் அவர்களை சந்தித்த பொழுது உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை செயல்படுத்தி நடுவர் மன்றம் அமைத்திட வேண்டும் என அழுத்தம் கொடுத்தேன். அதற்கு விரைவில் நடுவர் மன்றம் அமைக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

கேள்வி: 75 வது சுதந்திர தின நினைவுத் தூண் சென்னையில் எப்பொழுது அமைக்கப்படும்?

பதில்: இதற்கான அரசாணை நிதி ஒதுக்கீடு ஆகியவை விரைவில் வழங்கப்படும். அதனை தொடர்ந்து நினைவுத் தூண் அமைக்கும் பணி ஒரு மாதத்தில் முடிக்கப்படும்.

கேள்வி: உங்கள் அரசின் நூறு நாள் சாதனையாக எதை நீங்கள் கூறுவீர்கள்?

பதில்: உயிர் காக்கும் பணியே அரசின் முதல் கடமை. அந்த வகையில் கடந்த மூன்று மாதமாக நமது முதலமைச்சர் 24 மணி நேரமும் செயல்பட்டு கொரோனா தொற்றை கட்டுப்படுத்தி மக்களை காப்பாற்றியுள்ளார். மற்ற சாதனைகளைவிட இதையே முக்கிய சாதனையாக கருதுகிறேன். மேலும், பதவி ஏற்ற பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதல் கையெழுத்திட்ட ஐந்து திட்டங்களும் முக்கியமானவை. அதையும் நிறைவேற்றியுள்ளோம். தொடர்ந்து பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம்.

கேள்வி: கிருஷ்ணா நீரை குழாய் அமைத்து அதன் மூலம் கொண்டுவரப்படுமா?

பதில் : இத்திட்டம் செயல்படுத்தும் பொழுதே புட்டபர்தி சாய்பாபா அவர்கள் ஒரு திட்டத்தை என்னிடம் கூறினார். தண்ணீர் செல்லும் வழியில் அது வீணாவதைத் தவிர்க்க குழாய் அமைத்து தண்ணீர் அனுப்பலாம். அதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன் எனக் கூறினார். ஆனால், அப்பொழுது இருந்த அரசு அதை நிராகரித்து விட்டது. உலக வங்கி நிதியுதவி ரூ.1300 கோடி மதிப்பில் கீழ்பவானி கால்வாய்கள் புனரமைக்கும் பணி எடுக்கப்பட்டுள்ளது. திட்டத்தின்படி, தண்ணீர் தடையின்றி வேகமாக செல்ல வசதியாக இருபக்க கரைகள் மற்றும் தரைகள் சிமெண்ட் கான்கீரிட்டால் அமைக்கப்பட வேண்டும் என்று உள்ளது. இதை செயல்படுத்தினால் நீர் ஊர்வது தடைப்பட்டு நிலத்தடி நீர் மட்டம் உயர்வதும் தடைபடும் மற்றும் அருகில் உள்ள கிணறுகளில் நீர்மட்டம் உயராது எனக் கூறி

அப்பகுதி விவசாயிகள் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர். ஆகவே, தரையில் சிமெண்ட் கான்கீரிட் போடுவதை தவிர்த்துவிட்டு இத்திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தலாம். இதுகுறித்து விவசாயிகளிடம் மாவட்ட அமைச்சர், பொதுப்பணித்துறை செயலாளர், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்துமாறு கூறப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்படுத்தாவிட்டால் ரூ.1300 கோடி உலக வங்கிக்கு திரும்ப சென்று விடும்.

கேள்வி: கேரளா, தமிழ்நாடு நதிநீர் பேச்சுவார்த்தை எந்த நிலையில் உள்ளது?

பதில்: இரண்டு மாநில அரசுகளாலும் அமைக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு இரண்டு அமர்வுகள் பேசியுள்ளார்கள். அடுத்த அமர்வு கேரளாவில் நடைபெற வேண்டும் இரு மாநில பொதுப்பணித்துறை செயலாளர்களும் விரைவில் சந்தித்து பேச்சுவார்த்தைக்கான தேதியை முடிவு செய்வார்கள். அதனைத் தொடர்ந்து பேச்சு வார்த்தை விரைவில் நடைபெறும். இவ்வாறு கூறினார்.

*********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9